(6 pages) **Reg. No. :** ....

Code No. : 32155 **Sub. Code : G 1 TL 31**

U.G. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2013.

Third Semester

Part I — Tamil

செய்யுள், உரைநடை, நாவல், இலக்கணம், இலக்கிய வரலாறு மற்றும் பொதுக்கட்டுரை

(For those who joined in July 2012 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கற்பெனும் பெயரதொன்றுங் களி நடம் புரியக் கண்டேன் – யார் கூற்று?

   (அ) அனுமன் (ஆ) வாலி

   (இ) சுக்ரீவன் (ஈ) மாரீசன்

2. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர்

   (அ) சின்னதம்பி புலவர் (ஆ) செயங்கொண்டார்

   (இ) குமரகுருபரர் (ஈ) தொண்டைமான்

3. சுடுமணல் – நாவல் ஆசிரியர்

   (அ) மேத்தா

   (ஆ) வைரமுத்து

   (இ) சுப்ரபாரதிமணியன்

   (ஈ) பொன்னீலன்

4. மகேந்திரனின் தாய்

   (அ) லட்சுமி (ஆ) சரசுவதி

   (இ) பார்வதி (ஈ) தேவி

5. முதல் எழுத்துக்கள் எத்தனை?

   (அ) 18 (ஆ) 12

   (இ) 30 (ஈ) 36

6. ஆய்த எழுத்தினை இவ்வாறும் அழைப்பர்

   (அ) முதல் நிலை (ஆ) இடைநிலை

   (இ) தனிநிலை (ஈ) கடைநிலை

Nesamony Memorial Christian College, Marthandam

7. ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று

(அ) சூளாமணி (ஆ) சிந்தாமணி

(இ) வளையாபதி (ஈ) யாப்பருங்கலம்

8. சிற்றிலக்கியங்களை பாட்டியல் நூல் எத்தனை வகையாகக் குறிப்பிடுகின்றன

(அ) 96 (ஆ) 12

(இ) 63 (ஈ) 30

9. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை – என்று கூறியவர்

(அ) திருஞானசம்பந்தர்

(ஆ) திருநாவுக்கரசர்

(இ) சுந்தரர்

(ஈ) திருவள்ளுவர்

10. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் – என்று பாடியவர்

(அ) ஔவையார் (ஆ) தாயுமானவர்

(இ) வள்ளலார் (ஈ) பாரதியார்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்கள் அளவில் விடை தருக.

11. (அ) முக்கூடற்பள்ளு – நாட்டுவளம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மீனாட்சியம்மையின் தாலப்பருவம் – பற்றி எடுத்துரைக்க.

12. (அ) பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான் ஈசன் – வழி ஆசிரியர் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) பூவிலே சிறந்த பூ என்ன பூ – விளக்குக.

13. (அ) சுடுமணல் நாவலில் இடம்பெறும் வெங்கட்டய்யாவின் பாத்திரம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுடுமணல் நாவலின் மொழிநடை பற்றி விவரிக்க.

14. (அ) யாப்பு உறுப்புக்கள் பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உருவக அணி பற்றி விளக்குக.

15. (அ) குண்டலகேசி பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள் பற்றி விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களில் விடை தருக.

16. (அ) மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணத்தில் “திருவடிதொழுத படலம்” பற்றி விவரிக்க.

17. (அ) மனிதர் யாவரும் பணியாளர்களே – என்று ஆசிரியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விதியை மாற்றி அமைக்கும் வைராக்கியம் பெறுவோம் – ஆசிரியரின் கருத்தினைப் புலப்படுத்துக.

18. (அ) சுடுமணல் நாவலின் அடிக்கருத்தினைத் தெளிவுறுத்தி ஆசிரியரின் சிந்தனைத்திறத்தின் மேம்பாடு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுடுமணல் என்னும் நாவல் எதார்த்த நிலையில் அமைந்த இலக்கியம் என்று விவரிக்க.

19. (அ) வெண்பாவின் பொதுவிலக்கணம் கூறி அதன் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பின்வருநிலையணி, தீவக அணி பற்றி விளக்குக.

20. (அ) சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழ் இணைய வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

Nesamony Memorial Christian College, Marthandam